**கவனிக்க**.- *13.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1829 - 2013 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2013.09.20

*1829 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1245* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஐப்பசி மாதம் 20 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, புரட்டாதி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | காசல் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், டாம் வீதி, கொழும்பு 12 |
| கொழும்பு | கொழும்பு | ஹல்ஸ்ட்ரோப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், டாம் வீதி, கொழும்பு 12 |
| கொழும்பு | கொழும்பு | புதுக்கடை (நிவ் பஸார்) பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், டாம் வீதி, கொழும்பு 12 |

9-611

திருத்தம்

**கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

திறந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்
(தொழில்நுட்ப சேவை பிரிவில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்)

2013.08.30 ஆந் திகதிய 1,826 ஆம் இலக்கமுடைய அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதியானது 30.09.2013 என இத்தால் திருத்தப்படுகிறது.

டாக்டர் கே. எம். ரீ. கேந்தரகம,
செயலாளர்,
கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, சாந்த மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2013, செத்தெம்பர் 02.

9-612

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பாதுகாப்பு உதவியாளர் (கட்டடக்கலை/ தொழில்நுட்ப அலுவலர்) பதவியின் விசேட வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்

தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பாதுகாப்பு உதவியாளர் (கட்டடக்கலை/தொழில்நுட்ப உதவியாளர்) பதவியின் விசேட வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்காக கீழே இலக்கம் 2 இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகளுக்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள தொல்பொருள் திணைக்களத்தில் தற்போது பணியாற்றுகின்ற அல்லது அத்தினத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இளைப்பாறிய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகள் :**

| திகதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2001.12.01 | 04 |
| 2002.05.17 | 01 |
| 2006.12.28 | 04 |
| 2009.01.05 | 01 |

**குறிப்பு.**- இவ்வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தின்போது மேற்படி வெற்றிடங்களுக்காக இளைப்பாறிய அலுவலர்கள் பரிந்துரைக்கப்படுதலின் பேரில் அவ்வலுவலர்கள் இளைப்பாறிய திகதிகளுக்கேற்ப மேலும் வெற்றிடங்கள் ஏற்பட முடியும். அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. தகைமைகள்.**- அனைத்து விண்ணப்பதாரிகளும் (இளைப்பாறிய அலுவலர்கள் உட்பட) இலங்கை தொழில்நுட்ப சேவையில் பாதுகாப்பு உதவியாளர் (கட்டடக் கலை/தொழில்நுட்ப உதவியாளர்) 1 ஆம் வகுப்பில் 6 வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும், வெற்றிடத் திகதிக்கு உடன் முன்னரான 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.**- 2006.01.01 ஆந் திகதி தொடக்கம் 06/2006 (IV) ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க MN-07-2006A உரிய 20,030-11x365-18 x 500-33,045 சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

5. **தெரிவுசெய்யப்படும் முறை.**- தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் சேவை மூப்பு, திறமைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையொன்றினூடாக வெற்றிடங்களுக்கு சமமான அலுவலர்கள் எண்ணிக்கைக்கு பதவியுயர்வு வழங்கப்படும்.

**6. நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை**

(1) சேவை மூப்பு.- 60 புள்ளிகள்

இலங்கை தொழில்நுட்ப சேவையில் 1 ஆம் வகுப்பில் 6 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னரான ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதமும், 6 மாதத்திற்கு 2 புள்ளிகள் வீதமும் நேர்முகப் பரீட்சையின்போது கருத்திற்கொள்ளப் படுகின்ற வெற்றிடத் திகதிக்கு கணக்கிடப்பட்ட சேவைக் காலத்திற்கு உயர்ந்தபட்சம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.

(2) திறமைகள்.- 40 புள்ளிகள்

2.1 துறையுடன் தொடர்பான பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் - 10 புள்ளிகள்

(i) இரண்டு தினங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட உள்நாட்டுப் பாடநெறி/செயலமர்வு ஒன்றிற்கு 1 புள்ளி வீதம் - உயர்ந்தபட்சம் 4 புள்ளிகள்

(ii) வெளிநாட்டுப் பாடநெறி/ செயலமர்வு ஒன்றிற்கு 3 புள்ளிகள் வீதம் - உயர்ந்தபட்சம் 6 புள்ளிகள்

2.2 தொழிற்துறையுடன் தொடர்புடைய வேறு தொழிற்பாட நெறிகள் - 10 புள்ளிகள்

(தொழில்நுட்ப சேவைக்கு இணைத்துக்கொள்ளும் போது கருத்திற்கொள்ளப்பட்ட தகைமைக்கு மேலதிகமாக தொழிற்துறையின் கடமைகளுக்குத் தேவைப்படக்கூடிய தொழிற் பாடநெறிகளில் ஒரு பாடநெறிக்கு 5 புள்ளிகள் வீதம்)

2.3 தொல்பொருள் துறைக்குரிய வெளியீடுகள்/ தரப் பரிசீலனை அறிக்கைகள்/தொல்பொருள் இடங்கள் தொடர்பான திட்டங்கள் ஒன்றுக்கு 1 புள்ளி வீதம் - 10 புள்ளிகள்

2.4 கணனிப் பாவனை தொடர்பான அறிவுக்காக - 10 புள்ளிகள்

(i) தொழில்நுட்பப் பாடத்திற்குரிய நவீன மென் பொருட்களைக் கையாளுதல் தொடர்பாக பயின்றுள்ள 8 தினங்களுக்கு குறையாத பாட நெறியொன்றுக்கு 3 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் (Auto Cad போன்ற) - 6 புள்ளிகள்

(ii) ஏனைய கணனி இயக்கம்/ உள்ளீடு தொடர் பான பாடநெறிகளுக்காக (MS Word, Ms Exel, Web Designing, Hardware) போன்றன. ஒரு பாடநெறிக்கு 2 புள்ளிகள் வீதம் - உயர்ந்தபட்சம் 4 புள்ளிகள்

**குறிப்பு**.- நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தமது திறமைகளை எழுத்து மூலமான சான்றிதழ்களூடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- விண்ணப்பதாரிகள் இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பப்படிவமொன்றை 2013.10.07 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் தமது பிரிவுத் தலைவர் ஊடாக "பணிப்பாளர் (நிருவாகம்)" அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதோடு இளைப்பாறிய அலுவலர்கள் தனிப்பட்ட அடிப்படையில் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

செயலாளர்,
மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/படவரைஞர் பதவிகளின் விசேட வகுப்புக்குப் பதவியுயர்த்துதல்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :..............................................
2. முகவரி :..........................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :.....................................
4. பதவி :..............................................................................
5. முதலாம் வகுப்புக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி
6. கட்டடக்கலை/ பொறியியல் துறை தொடர்பாக பயின்றுள்ள தொழிற் பாடநெறிகள் :

(i) :...........................................................
(ii) :...........................................................
(iii) :...........................................................

7. பங்குபற்றியுள்ள பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் :

(i) :...........................................................
(ii) :...........................................................
(iii) :...........................................................

8. மேலதிக தகைமைகள் :

(i) :...........................................................
(ii) :...........................................................
(iii) :...........................................................

9. ஒழுக்காற்று தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதா/ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளதாவென்பது காலப்பகுதிகளுடன் :

.........................................................................................
.........................................................................................

10. சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்டுள்ளதாவென்பது உரிய கால எல்லைகளுடன் :

.........................................................................................
.........................................................................................

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................,
விண்ணப்பதாரியின் கையொப்பமும் திகதியும்.

**பிரிவுத் தலைவரின் பரிந்துரை**

மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் தொழில்நுட்ப சேவையில் ............................................... பணியாற்றுகின்றாரெனவும், பதவியின் விசேட வகுப்பிற்கு பதவியுயர்த்துவதற்கான பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் என்னால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது./ பரிந்துரை செய்யப்படவில்லையென குறிப்பிடுகின்றேன்.

............................,
பணிப்பாளர் (கட்டடக்கலை).

9-565/1

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் படவரைஞர் பதவிகளின் விசேட வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்

தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் படவரைஞர் பதவியின் விசேட வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்காக கீழே இலக்கம் 2 இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகளுக்கு குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள தொல்பொருள் திணைக் களத்தில் தற்போது பணியாற்றுகின்ற அல்லது அத்தினத்தில் தகைமை களைப் பூர்த்திசெய்துள்ள இளைப்பாறிய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* **வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகள் :**

| திகதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2001.12.01 | 01 |
| 2006.12.28 | 01 |
| 2008.09.01 | 01 |
| 2013.03.10 | 01 |

**குறிப்பு**.- இவ்வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தின்போது மேற்படி வெற்றிடங்களுக்காக இளைப்பாறிய அலுவலர்கள் பரிந்துரைக்கப்படுதலின் பேரில் அவ்வலுவலர்கள் இளைப்பாறிய திகதிகளுக்கேற்ப மேலும் வெற்றிடங்கள் ஏற்பட முடியும். அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

*3.* **தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் (இளைப்பாறிய அலுவலர்கள் உட்பட) இலங்கை தொழிநுட்ப சேவையில் படவரைஞர் 1 ஆம் வகுப்பிலிருந்து 6 வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும், வெற்றிடத் திகதிக்கு உடன் முன்னரான 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

*4.* **சம்பள அளவுத்திட்டம்**.- 2006.01.01 ஆந் திகதி தொடக்கம் 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க MN-07-2006A உரிய 20,030-11x365-18 x 500-33,045 சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

5. **தெரிவுசெய்யப்படும் முறை**.- தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் சேவை மூப்பு, திறமைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையொன்றினூடாக வெற்றிடங்களுக்கு சமமான அலுவலர்கள் எண்ணிக்கைக்கு பதவியுயர்வு வழங்கப்படும்.

*6.* **நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை :**

(1) சேவை மூப்பு.- 60 புள்ளிகள்

இலங்கை தொழில்நுட்ப சேவையில் 1 ஆம் வகுப்பில் 6 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னரான ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதமும், 6 மாதத்திற்கு 2 புள்ளிகள் வீதமும் நேர்முகப் பரீட்சையின்போது கருத்திற்கொள்ளப்படுகின்ற வெற்றிடத் திகதிக்கு கணக்கிடப்பட்ட சேவைக் காலத்திற்கு உயர்ந்தபட்சம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.

(2) திறமைகள்.- 40 புள்ளிகள்

2.1 துறையுடன் தொடர்பான பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் - 10 புள்ளிகள்

(i) இரண்டு தினங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட உள்நாட்டுப் பாடநெறி/செயலமர்வு ஒன்றிற்கு 1 புள்ளி வீதம் - உயர்ந்தபட்சம் 4 புள்ளிகள்

(ii) வெளிநாட்டுப் பாடநெறி/செயலமர்வு ஒன்றிற்கு 3 புள்ளிகள் வீதம் - உயர்ந்தபட்சம் 6 புள்ளிகள்

2.2 தொழிற்றுறையுடன் தொடர்புடைய வேறு தொழிற்பாட நெறிகள் - 10 புள்ளிகள்

(தொழினுட்ப சேவைக்கு இணைத்துக்கொள்ளும் போது கருத்திற்கொள்ளப்பட்ட தொழிற் தகைமைக்கு மேலதிகமாக தொழிற்துறையின் கடமைகளுக்குத் தேவைப்படக்கூடிய தொழிற் பாடநெறிகளில் ஒரு பாடநெறிக்கு 5 புள்ளிகள் வீதம்)

2.3 தொல்பொருள் துறைக்குரிய வெளியீடுகள்/தரப் பரிசீலனை அறிக்கைகள்/தொல்பொருள் இடங்கள் தொடர்பான திட்டங்கள் ஒன்றுக்கு 1 புள்ளி வீதம் - 10 புள்ளிகள்

2.4 கணனிப் பாவனை தொடர்பான அறிவுக்காக - 10 புள்ளிகள்

(i) தொழிநுட்பப் பாடத்திற்குரிய நவீன மென் பொருட் களைக் கையாளுதல் தொடர்பாக பயின்றுள்ள 8 தினங்களுக்கு குறையாத பாட நெறியொன்றுக்கு 3 புள்ளிகள் வீதம் (Auto Cad போன்றன) உயர்ந்த பட்சம் - 6 புள்ளிகள்

(ii) ஏனைய கணனி இயக்கம்/ உள்ளீடு தொடர்பான பாடநெறிகளுக்காக (MS Word, Ms Exel, Web Designing, Hardware போன்றன). ஒரு பாடநெறிக்கு 2 புள்ளிகள் வீதம் - உயர்ந்தபட்சம் 4 புள்ளிகள்

**குறிப்பு**.- நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தமது திறமைகளை எழுத்து மூலமான சான்றிதழ்களூடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- விண்ணப்பதாரிகள் இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பப்படிவமொன்றை 2013.10.07 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் தமது பிரிவுத் தலைவர் ஊடாக "பணிப்பாளர் (நிருவாகம்), அவர்களுக்கு" அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதோடுத இளைப்பாறிய அலுவலர்கள் தனிப்பட்ட அடிப்படையில் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

செயலாளர்,
மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/படவரைஞர் பதவிகளின் விசேட வகுப்புக்குப் பதவியுயர்த்துதல்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :...............................................
2. முகவரி :..........................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :......................................
4. பதவி :..............................................................................
5. முதலாம் வகுப்புக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி

6. கட்டடக்கலை/பொறியியல் துறை தொடர்பாக பயின்றுள்ள தொழிற் பாடநெறிகள் :

(i) :...........................................................
(ii) :...........................................................
(iii) :...........................................................

7. பங்குபற்றியுள்ள பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் :

(i) :...........................................................
(ii) :...........................................................
(iii) :...........................................................

8. மேலதிக தகைமைகள் :

(i) :...........................................................
(ii) :...........................................................
(iii) :...........................................................

9. ஒழுக்காற்று தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதா/ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளதாவென்பது காலப்பகுதிகளுடன் :

.........................................................................................
.........................................................................................

10. சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்டுள்ளதாவென்பது உரிய கால எல்லைகளுடன் :

.........................................................................................
.........................................................................................

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................,
விண்ணப்பதாரியின் கையொப்பமும் திகதியும்.

**பிரிவுத் தலைவரின் சான்றிதழ்**

மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் தொழில்நுட்ப சேவையில் ................................................ பணியாற்று கின்றாரெனவும், பதவியின் விசேட வகுப்பிற்கு பதவியுயர்த்துவதற்கான பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் என்னால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது./ பரிந்துரை செய்யப்படவில்லையென குறிப்பிடுகின்றேன்.

............................,
பணிப்பாளர் (கட்டடக்கலை).

9-565/2

---

## நிர்மாணத்துறை, பொறியியற் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பயிற்சியற்ற தொழிலாளர் பதவிக்காக இவ் அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகக்குறைந்த தகைமைகள் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முறை :**

1.1 இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் "ஏ4" அளவிலான கடதாசியில் இரு பக்கங்களை உபயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தகுந்த முறையில் பூரணப்படுத்தி "தொழிற்சாலை பொறியியலாளர், அரசாங்கத் தொழிற்சாலை, கொலொன்னாவ" என்ற முகவரிக்கு 2013, புரட்டாதி மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் தபால் உறையில் மேலே இடதுமுனையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

1.2 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கவனத்திற்கு.**- விண்ணப்பங்களைப் பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. உரிய தகைமைகள் பெற்றில்லாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகைமைகளைப் பூரணப்படுத்தி இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தபாலில் ஏற்படக்கூடிய தாமதங்களை தடுத்திடும் முகமாக நேரகாலத்துடன் விண்ணப்பங்களை தபால் செய்யுமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு போலியான விபரம் சேர்த்துக்கொள்வதற்கு முன் வெளியானால் விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவம் செல்லுபடியற்றதாக்கப்படும். சேர்ந்ததன் பின்னர் அத்தகையதொரு போலியான தகவல் வெளியானால் சேவையில் இருந்து வெளியேற்றத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

2. **கல்வித் தகைமைகள்.**- கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரு முறைக்கு அதிகப்படாத தடவைகளின்போது ஆகக்குறைந்தது இரு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

3. **சம்பள அளவு.**- பொது நிர்வாக சுற்றுநிருப 6/2006 (IV) ஆம் இலக்கத்தில் பீஎல் 1-2006ஏ சம்பள பரிமாணத்தின் பிரகாரம் ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-17,600. (ரூபா 12,090 இற்கு முன் வினைத்திறன் கடவைப் பரீட்சை இருக்கின்றது).

4. **ஏனைய தகைமைகள்.**- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். சிறந்த ஒழுக்கத்துடனும் தகுந்த உடல் நலத்துடனும் இருத்தல் வேண்டும்.

5. **வயது எல்லை.**- 2013.09.30 ஆந் திகதிக்கு வயது 18 இற்கு குறையாத மற்றும் 45 இற்கு மேலாகாததாக இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருப்போருக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருத்தமாவதில்லை).

6. **பதவி வழங்கும் முறை.**- கட்டமைப்பு ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வினை நடாத்தி பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மீது ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

7. **அரச மொழிகள் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்.**- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 07/2007 இன் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதிக்கு பின்னர் சேவைக்குச் சேரும் அனைவரும் அரச சேவைக்குச் சேர்ந்த அரச மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச மொழி தொடர்பாக நிபுணத்துவத்தை அரச சேவையில் சேர்ந்து 5 வருடங்களினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**8. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள் :**

8.1 இப்பதவி நிலையானதாகும். ஓய்வூதியமுடையதுமாகும். விதவை, அனாதைகள், மற்றும் தபுதாரர் ஓய்வூதிய சம்பள நிதியத் திற்கான பங்களிப்பை வழங்க வேண்டும்.

8.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நிறுவன கோவையில் ஒழுங்குகளுக்கு ஏற்றபடியாகவும் நிதி ஒழுங்குகளுக்கு ஏற்றபடியாகவும், அரச அல்லது சம அரசு மற்றும் அரச தொழிற்சாலைகளினால் வெளியிடப்படும் நிபந்தனைகள் மற்றும் சட்டங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

8.3 நிறுவனக் கோவையில் II ஆம் அத்தியாயத்தில் 10 ஆம் பிரிவு முதல் 12 ஆம் பிரிவு வரையான அத்தியாயங்களின் விதிமுறைகள் ஏற்புடையதாகும்.

8.4 நியமனம் வழங்கல் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டாகும்.

தொழிற்சாலை பொறியியலாளர்,
அரசாங்க தொழிற்சாலை,
கொலொன்னாவ.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நிர்மாணத்துறை, பொறியியற் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு**

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்

விண்ணப்பிக்கின்ற பதவி :................................................................

(அலுவலக பரிசீலனைக்கு மாத்திரமே)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :.............................................
..............................................................................................
(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :...............
..............................................................................................
(iii) முதலெழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில்) :............................

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:
(i) முகவரி :.................................................................................
..............................................................................................
(ii) தொலைபேசி இலக்கம் :.......................................................
(முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அறிவித்தல் வேண்டும்).

3. பிறந்த இடம் மற்றும் திகதி :...........................................................

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கான வயது :

வருடங்கள் :.............., மாதங்கள் :.............., நாட்கள் :..............

தேசிய ஆளடையாள அட்டை இலக்கமும் வழங்கப்பட்ட திகதியும் :
..............................................................................................
..............................................................................................

4. தாங்கள் இலங்கைப் பிரசையா ? :........................

5. (i) பால் :......................................
(ii) சிவில் அந்தஸ்து :.......................................

6. கல்விசார் தகைமைகள் :

| விடயம் | ஆண்டு | சித்தி |
|---|---|---|
| | | |

7. ஏனைய தகைமைகள் :........................

8. இனத்தொகுதி :
(கூட்டினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

| | |
|---|---|
| சிங்களவர் | - 1 |
| இலங்கைத் தமிழர் | - 2 |
| இலங்கை முஸ்லிம்கள் | - 3 |
| இந்திய வம்சாவளியினர் | - 4 |
| ஏனையோரார் | - 5 |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உட்படுகின்ற தகவல்களிலிருந்து ஏதேனும் உண்மைக்கு மாறாகவோ பிழையானதாகவோ என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் வெளிவந்தால் நான் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கு கட்டுப்படுவதாகவும் நியமிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக அறிந்தால் எத்தகைய நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

................................,
விண்ணப்பதாரி.

2013, ........................................

(இப்பகுதி அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் பயிலுனர்களுக்கு மாத்திரமே.)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் ................................ ......................................... பதவிக்காக விண்ணப்பிக்கும் .................................................. அமைச்சில்/திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ................................................................ தற்போது .............................................................. பதவியில் சேவை புரிகின்றதாகவும்/பயிற்சி பெறுகின்றதாகவும், இவரது வேலைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானவை எனவும் உறுதிப்படுத்து கின்றேன். இவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

....................................,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உத்தியோகபூர்வ முத்திரை :..............................................................
திகதி :.....................................................

9-566

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.